# 05.

## அழகான மீன் குட்டி

என்னால் உங்களை போல் நடக்க முடியாது. ஊர்ந்து செல்லவும் முடியாது. பறக்கவும் முடியாது. பாய்ந்து செல்லவும் முடியாது. சுருக்கமாகச்சொன்னால் உங்களுடைய உலகத்தில் என்னால் வாழவும் முடியாது. நிலத்திற்கு வந்தால் நான் இறந்துவிடுவேன். நான் நீரிலே வாழ்கிறேன். ஆம்... நான் ஒரு மீன்!

நான் ஒரு நீர் தாங்கியில் இருக்கிறேன். என்னால் வேகமாக நீந்த முடியும். என்னோடு இன்னும் விதம் விதமான மீன்கள் இருக்கின்றன. நாம் வாழும் நீர்த்தாங்கியில் சிலவேளை பச்சைநிற பாசிகள் படிந்து விடும் அப்போது எம்மால் இலகுவாக சுவாசிக்க முடியாது. எம்மை வளர்க்கின்றவர்கள் மிகவும் நல்லவர்கள். எமது தாங்கியினுள் ஒரு மோட்டரை பொருத்தியுள்ளனர். தாங்கிக்கொள்ள முடியாத வண்ணம் அதிலிருந்து சத்தம் வரும் அதேவேளை அதிலிருந்து வளிக்குமிழ்களும் வெளியே வரும். அந்த வழிக்குமிழ்கள் எமக்கு மிகவும் சுகமாக இருக்கும்.

ஒருநாள் ஒரு சிறுவன் என்னையே பார்த்துக்கொண்டிருந்தான். நான் மிகவும் பயந்துவிட்டேன். என் பக்கமாக விரலை நீட்டி இவ்வாறு கூறினான். ‘அண்ணா அங்கே பாருங்கள்... இந்த மீனுக்கு கோல்ட் பிஸ் என்று தானே பெயர்’

‘ஆம் தம்பி. இவற்றை மிகவும் பாதுகாப்பாக வளர்க்க வேண்டும். குராமின் மீனுக்குப்போல் பாசிகளை கொடுக்க முடியாது.’

அவர்கள் பேசுவது மிகவும் புதுமையாக இருக்கிறது. மீன்களுக்கு வித விதமான பெயர்களை சூட்டியுள்ளனர். எது எப்படியோ எமக்கு கொடுக்கும் சாப்பாடு மிகவும் சுவையானது. ஆனாலும் தாங்கியை சுத்தப்படுத்தும் நாளை போன்று நாம் வெறுக்கின்ற வேறு நாளில்லை. அன்றைக்கு நாம் மிகவும் அவஸ்தைப்படுவோம். எம்மை சிற்சிறு வலைகளினால் வெளியே எடுப்பார்கள். நான் ஒருநாள் மூச்சு எடுக்க முடியாமல் திணறிவிட்டேன். நான் மிகவும் வேகமாக துடித்ததால் கீழே விழுந்துவிட்டேன். யாரோ என்னை இறுக்கிப்பிடித்தார்கள். எனக்கு இன்னும் கஷ்டமாக இருந்தது. பிடித்து என்னை தண்ணீரில் போட்டார்கள். அதன் பிறகும் சிறிது நாட்கள் வரை என் உடம்பு மிகவும் வலித்தது.

நாம் வாழும் தாங்கிக்கு மிகவும் கொடிய இனத்திலான மீன்களை போட்டார்கள். ஐயோ... அந்த காலத்தில் நாம் மிகவும் துன்புற்றோம். அந்த கொடூரமான மீன்கள் எம் பின்னாலேயே துரத்தி துரத்தி வந்து எம்மை

கொத்தி துன்புறுத்தின. அவையின் பெயர் ஏதோ 'சாரி கப்பி' என்று கேள்விபட்டேன். அவை எம்மை துரத்தி துரத்தி வந்து எம்மை கொத்தி விடுகின்றன. 'உங்களை விடமாட்டோம். சாகும் வரை துரத்தி துரத்தி வருவோம்' என கூச்சலிட்டுகொண்டு எம்பின்னாலேயே நீந்தி வந்து எம்மை கடித்து துன்புறுத்தின. அதனாலேயே எனது பெரும்பாலான நண்பர்கள் இறந்துவிட்டார்கள். நாம் மிகவும் நோயுற்றோம். எம்மால் நீந்தவோ அல்லது சாப்பிடவோ முடியாமல் போனது. நாம் 'எம்மை விட்டுவிடுங்கள்... எங்களை கொல்லாதீர்கள்' என அழுதழுது கூறினோம்... எமது அதிஷ்டமோ என்னவோ மறுநாளே அவர்களை எமது தாங்கியிலிருந்து அகற்றிவிட்டார்கள்.

ஒருநாள் எமது தாங்கிக்கு மிகவும் பெரிய இனத்திலான மீனினை போட்டார்கள். அந்த மீன் மாமா எம்மிலும் பார்க்க மிகவும் பெரியவர். அவருக்கு பெரிய கண்கள் இருந்தன. அவரால் வேகமாக நீந்தவும் முடியும். அவர் எம்மைபோல் நீர்தாங்கியில் பிறக்கவில்லையாம். அவர் பெரியதொரு நதியில் இருந்திருக்கிறார். அவர் எம்மனைவரையும் ஒன்றுகூட்டி இவ்வாறு கூறினார். 'உங்களுக்கு நினைத்துகூட பார்க்க முடியாது. இம்மாதிரியான கொஞ்சம் தண்ணீரல்ல. விசாலமானதொரு நதியிலிருந்தே நான் வந்தேன். அந்த நதியின் நீர் எந்நேரமும் வேகமாக பள்ளத்தை நோக்கி பாய்ந்து கொண்டே இருக்கும். அதன் வேகம் மென்மேலும் கூடும் சந்தர்ப்பங்களில் நாம் நதியோரங்களில் உள்ள பாசிகளில் மறைந்து கொள்வோம்.

இந்த தாங்கியை போல் அல்ல. நதியில் வாழ்வது மிகவும் கடினம். மிகவும் கொடூரமான மீன்கள் இருக்கின்றன. ஒரு கொடிய மீன் எனது அத்தனை பிள்ளைகளையும் சாப்பிட்டுவிட்டது. நாமும் ஏனைய மீன்களது சிறு குட்டிகளையும் சாப்பிட்டுள்ளோம். ஆனால் பெரும்பாலும் நாம் சாப்பிடுவது சேரும் பாசிகளையும் தான். ஒவ்வொரு நாட்களில் மேலிருந்து புழுக்கள் நீரின் மேல் விழும். எனது பல நண்பர்கள் அந்த புழுக்களை விழுங்கினார்கள்... மிகவும் விந்தையான விடயம் என்னவென்றால் அந்த புழுக்ளை விழுங்கியவுடனே தொண்டையில் ஒரு கொக்கி சிக்கிக்கொள்ளும். அதன் பிறகு எதுவும் செய்ய முடியாது. ஏதோ நூல் போன்ற ஒன்றினால் அந்த புழுவை சாப்பிட்ட மீன் நீருக்கு மேலே சென்றுவிடும். அவர்கள் யாருமே மீண்டும் திரும்பி வரவேயில்லை.

நான் அழகான மீன் என்பதால் அனைத்து ஆபத்துக்களிலிருந்தும் தப்பிவிட்டேன் என்றுதான் நினைக்கிறேன். ஹா..ஹா... இல்லை என்றால் என்னால் இவ்வளவு நாள் வாழ்ந்திருக்கவும் முடியாது. வேறு சில நாட்களில் பெரிய பெரிய வலைகளை வீசி எம்மை பிடித்து கொள்வார்கள். எனது பல

நண்பர்கள் அதில் மாட்டிக்கொண்டார்கள். கூட்டமாக சென்று மாட்டிக்கொண்ட அவர்கள் ஒருபோதும் திரும்பி வரவேயில்லை. எங்கு போனார்கள் என்று இதுவரையிலும் தெரியாது... ஆ.. ஆ.. கதை கேட்டது போதும். இப்போது எல்லோரும் எனது முதுகை சொரிந்து விடுங்கள்'

நாமும் அவரது முதுகு வலிக்காதபடி மெதுவாக கொத்திக்கொண்டிருந்தோம். எமது இந்த மீன் வாழ்வில் எவ்வித சந்தோஷமும் இல்லை. சில மீன்கள் சாப்பிடாமல் அழுதழுது இருந்தே மடிந்து போகின்றன. நாம் மிகவும் துரதிஷ்டமானவர்கள். சிறிதளவேனும் சந்தோஷமாக இருப்பது உருவம் அழகாக இருந்தால் மாத்திரம் தான். ஆனால் நாம் எந்நேரத்தில் மரணிப்போம் என்று எமக்கே தெரியாது. சம்சார பயணத்தில் செய்த பாவங்களினாலேயே இம்மாத்திரியான துன்பமான வாழ்வு எமக்கு கிடைத்தது.

**வேகமாக நீந்தினாலும் சிறிதளவே இன்பம்...**

**அழகிய நிறமிருந்தாலும் துக்கமே மீதமுள்ளது...**

**சுவையாக இருக்கும் என நம்பி விழுங்கினால்**

**அது தூண்டிலாகவே இருக்கும்...**

**அப்படி அதுவே இருந்தால்...**

**மரணம் நிச்சயமே...**

**சன்சாரத்தில் செய்த பாவங்களினால்...**

**துன்பமே சொத்தாகியது.**

**பிறந்த பிறந்து செல்வதை தவிர வேறொன்றும் அறிந்திலேன்...**

**எவ்வளவு காலம் எப்படி இருந்தாலும் இந்த நீரினுள்ளே...**

**புண்ணியங்கள் செய்ய முடியாது...**

**இந்த பிறப்பு நரகத்திற்குரியதே...**